**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.846/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | சுமித்ரா, வயது 39 |
| Father Name/Husband Name | : | ராஜகோபால் |
| Village | : | சித்திரம்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பெண் தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2025 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 07.00 மணியளவில் நான், தலைமை காவலர் 1259 ரமேஷ் மற்றும் பெண் தலைமை காவலர் 1269 சுரேந்திரன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின்படி ரோந்து செய்து கண்காணித்து வந்த போது கோவில்பட்டி, லட்சுமி மில் காலனி அருகே ரோந்து செய்து வரும்போது சந்தேகத்துடன் பிளாஸ்டிக் சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்த நபர் பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து மணிராஜ், த.பெ. கருப்பையா என்பவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Black Golden choice Brandy பாட்டில்கள் 18 எண்ணம் மற்றும் சுமார் 180 ML அளவு கொண்ட Top star Brandy பாட்டில்கள் 10 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு

மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்ட்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 08.30 மணியளவில் நிலைய குற்ற எண். 88/2025 U/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி தலைமை காவலருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3 உதவி ஆய்வாளர் முருகதாஸ் எங்களுடன் ரோந்து பணிக்கு வரவில்லை என்றால் சரிதான். மேற்படி உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் நானும், த.கா 1269 சுரேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அத்தாட்சியை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் அடித்தல், திருத்தல் உள்ளதா என்றால் உள்ளது. எதிரியை எந்த இடத்தில் வைத்து கைது செய்தததாக அத்தாட்சியில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4 பொதுமக்கள் எதிரி மது விற்றதாக எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கடைகள் நிறைய உள்ளதால் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது பொதுமக்கள் நிறைய பேர் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் ரோந்து சென்றதற்கான எங்களது பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. அத்தாட்சியில் வெள்ளை பிளாஸ்டிக் பை துலங்குமா என்றால் துலங்காது. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை

என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.